**OS.No. 437/2022**

**PW1 – முத்து ரத்தினம் த/பெ.சுப்புராய கவுண்டர்**

**நாள். 05.11.2024**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்தான சர்வே எண் 241 கண்ட சொத்தானது நாகேஸ்வர சுவாமி திருக்கோவிலுக்கு மத்தளம் சர்வீஸுக்கு கொடுத்த நிலம் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. உதவி செட்டில்மெண்ட் அலுவலர் 13.10.1972 இல் பிறப்பித்த உத்தரவின் படி மேற்படி சுத்தானது மத்தளம் சர்வீஸ் கொடுக்கப்பட்ட நிலம் என்று மேற்படி காரியத்திற்காக பட்டா வழங்க வேண்டும் என்று. குறிப்பாக சொல்லி உள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது மேற்படி நிலம் சம்பந்தமான பழைய ஆர் எஸ் ஆர் ஆவணத்தில் மத்தளம் சர்வீஸ் செய்த அங்கம்மாள் கணவர் பெயர் முத்து கருப்பசாமி என்பவர் பெயரில் இருந்தது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது யாரிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக எனது மூதாதையர்கள் பரம்பரையாக அனுபவித்து வருகிறார்கள். வா.சா 2 பாகப்பிரிவினை ஆனது எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்ற விவரத்தை சொல்ல இயலுமா என்றால் எனது தாத்தா மற்றும் அவர்களது பாகஸ்தர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் எனவே அதைப் பற்றி எனக்கு தெரியாது . செட்டில்மெண்ட் தாசில்தார் 13.10.1972 ல் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக எனது மூதாதையர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்தார்களா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் உத்தரவானது இறுதியானது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை தெரிந்தும் எங்களுக்கு மேற்படி சொத்தில் உரிமை ஏதும் இல்லாத நிலையில் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏதோ ஒரு வகையில் எங்களது பெயரை வருவாய் ஆவணங்களில் சேர்த்துக் கொண்டோம் என்றால் சரியல்ல.

2. நான் வழக்குரையில் சொல்லியுள்ள CMA 763/1969 மேல்முறையீட்டு ஆவணங்களின் நகல்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதற்கான குறிப்பிட்ட காரணம் உள்ளது என்றால் அவ்வாறு ஏதும் இல்லை.

சாதாரணமாக கோயில் பணிவிடை செய்தவர்களுக்காக வழங்கப்படும் நிலமானது அவ்வாறு பணிவிடை செய்த நபர் பணி செய்யாமல் வெளியேறி விட்டால் அந்த நிலமானது கோவிலுக்கு பாத்தியப்பட்டு விடும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் தாசில்தார் 13.10.1972 தேதியில் பிறப்பித்த உத்தரவு எனக்கு நன்கு தெரிந்தும் அதை வழக்குரையில் ஒத்துக் கொண்டு பின்னிட்டு தற்பொழுது அது எனக்கு தெரியாது என்று தவறாக சாட்சி மன்னிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது சிறிய தாத்தா செட்டில்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக CMA 763/1969 தாக்கல் செய்தார் என்றும் அதன் அடிப்படையில் மட்டுமே செட்டில்மெண்ட் தாசில்தார் வாசா 7 உத்தரவை பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல மேற்படி உத்தரவானது எனது தாத்தா தாக்கல் செய்ததாக கூறும் மேல்முறையீட்டுக்கான உத்தரவு அல்ல என்றால் சரியல்ல. எனது தாத்தா சுப்பராய கவுண்டர் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா சுப்புராய கவுண்டர் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் CMA 763/1969 க்கு பின்னிட்டு 13.10.1972 தேதியிட்ட உத்தரவானது என் தாத்தாவிற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்பதால் மேற்படி உத்தரவின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல எனது தாத்தா செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் தாவாசொத்தை பொறுத்து தாசில்தாரின் உத்தரவிற்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல .

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.11.05 18:56:48 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.